வணிக வித்தியம்
The Journal of Business Economics and Management Studies - JBEMS
Faculty of Commerce & Management
Eastern University, Sri Lanka.

# Livelihood Challenges and Social Security Schemes of Theatre Artists: A Study Centered on the Batticaloa Region

## நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரச் சவால்களும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும்: மட்டக்களப்புப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

*அழகையா விமலராஜ்*
*சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*
vimalaraj72@gmail.com

**Abstract**

The traditions of koottu (folk theatre) and various other theatre forms prevalent in the Batticaloa District are significant cultural markers of the area. However, the artists who preserve and sustain these art forms face persistent economic disadvantages and severe livelihood challenges. This study primarily aims to assess the socio-economic conditions of these artists, who have been pushed to the margins by modern globalisation and domestic economic crises. In addition, this study also identifies the causes of their occupational insecurity and evaluates the effectiveness of existing social protection programmes. Based on data gathered through interviews and focus group discussions conducted with artists from various parts of Batticaloa district, the study finds that the non recognition of theatre artists as a full time profession is a primary cause of poverty. The absence of income during long rehearsal periods, the seasonal nature of theatre work, and the prevailing social attitude that an artist is a 'Martyr', leading to extremely low remuneration, have burdened artists with debt and economic hardship. Moreover, the complete lack of medical insurance to cover stage accidents or health issues further reinforces their occupational insecurity. The government implemented the Artists' Pension Scheme, which fails to reach 80% of artists due to its eligibility age of 45, difficulties in making contributions, and Colombo centric administrative procedures. Furthermore, while the Artist Identity Card issued by the Department of Cultural Affairs provides a form of social recognition, practical obstacles persist in using it to access banking services or credit facilities. Overall, existing protection schemes have failed to address the real needs of artists. This study emphasises that the cultural protection of a community ultimately depends on the economic security of the artists who sustain its art forms.

**Keywords:** Theatre Artists, Livelihood Challenges, Social Security, Batticaloa, Creative Economy, Koothu Tradition

*Corresponding* vimalaraj72@gmail.com

© *Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.*

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நிலவும் கூத்து மற்றும் பன்முக நாடக மரபுகள் அப்பகுதியின் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன. ஆயினும், இக்கலைகளைப் பேணிப் பாதுகாக்கும் கலைஞர்களின் பொருளாதார நிலை தொடர்ச்சியான பின்னடைவுகளையும் பாரிய வாழ்வாதாரச் சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றது. நவீன உலகமயமாதல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடிகளால் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இக்கலைஞர்களின் சமூகப் பொருளாதாரச் சூழலை மதிப்பிடுவதும், அவர்களின் தொழில்சார் பாதுகாப்பின்மைக்கான காரணங்களைக் கண்டறிவதும், நடைமுறையிலுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வினைத்திறனைத் திறனாய்வு செய்வதும் இவ்வாய்வின் முதன்மை நோக்கங்களாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் குவியக்குழு கலந்துரையாடல்கள் மூலம் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நாடகக் கலை ஒரு முழுநேரத் தொழிலாக அங்கீகரிக்கப்படாமை வறுமைக்கு ஒரு முதன்மைக் காரணியாகக் கண்டறியப்பட்டுள்ளது. நீண்ட பயிற்சிக் காலங்களில் வருமானமின்மை, நாடகத் தொழிலின் பருவகாலத் தன்மை மற்றும் கலைஞன் என்பவன் ஒரு தியாகி எனும் சமூகப் பொதுப்புத்தியால் அவர்களுக்கு வழங்கப்படும் மிகக் குறைந்த ஊதியம் போன்றவை கலைஞர்களைக் கடன் சுமையிலும் பொருளாதார நலிவிலும் தள்ளியுள்ளன. மேலும், மேடை விபத்துகள் அல்லது உடல்நலப் பாதிப்புகளை எதிர்கொள்ள எவ்வித மருத்துவக் காப்புறுதி வசதிகளும் இல்லாமை அவர்களின் தொழில்சார் பாதுகாப்பற்ற நிலையை உறுதி செய்கின்றது. அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கலைஞர் ஓய்வூதியத் திட்டமானது 45 வயது எனும் வயது வரம்பு, பங்களிப்புத் தொகையைச் செலுத்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் கொழும்பை மையப்படுத்திய நிருவாக நடைமுறைகளால் 80 சதவீதம் கலைஞர்களைச் சென்றடைவதில்லை. அத்துடன், கலாசாரத் திணைக்களத்தால் வழங்கப்படும் கலைஞர் அடையாள அட்டையானது ஒரு சமூக அங்கீகாரமாக அமைந்தபோதிலும், அதனைக் கொண்டு வங்கி மற்றும் கடனுதவிகளைப் பெறுவதில் நடைமுறைச் சிக்கல்கள் நீடிக்கின்றன. ஒட்டுமொத்தமாக, தற்போதுள்ள பாதுகாப்புத் திட்டங்கள் கலைஞர்களின் எதார்த்தமான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறியுள்ளன. ஒரு சமூகத்தின் பண்பாட்டுப் பாதுகாப்பு என்பது அக்கலைகளைத் தாங்கி நிற்கும் கலைஞர்களின் பொருளாதாரப் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகின்றது. .

**முதன்மைச் சொற்கள்:** நாடகக் கலைஞர்கள், வாழ்வாதாரச் சவால்கள், சமூகப் பாதுகாப்பு, மட்டக்களப்பு, படைப்பாற்றல் பொருளாதாரம், கூத்து மரபு

## 1. அறிமுகம்

மட்டக்களப்புப் பிரதேசத்தின் சமூகப் பண்பாட்டு வரலாறும் மக்களின் வாழ்வியலும் அதன் நாடகக் கலை வடிவங்களினூடாகவே உயிர்ப்புடன் கட்டமைக்கப்பட்டுள்ளன. நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட இப்பிரதேச நாடக மரபு, இன்று உலகளாவிய அரங்கப் போக்குகளுடன் இணைந்து பயணித்தபோதிலும், அதனைத் தாங்கி நிற்கும் கலைஞர்களின் வாழ்வாதாரம் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. ஒரு கலையின் நீடிப்புத்திறன் என்பது அக்கலையைப் பேணும் கலைஞனின் சமூக-பொருளாதாரப் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்ற எதார்த்தத்தின் அடிப்படையில் இவ்வாய்வு அமைகின்றது.

மட்டக்களப்பின் நாடக வரலாறானது தொன்மையான கூத்து வடிவங்களில் தொடங்கி, கொட்டகை நாடகங்கள் ஊடாக நவீன நாடகங்கள் வரை ஒரு நீண்ட பரிணாம வளர்ச்சியைக் கொண்டுள்ளது. தொடக்கத்தில் சடங்கு சார்ந்தும், பின்னர் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பும் ஊடகமாகவும் விளங்கிய இந்நாடகக் கலை, ஈழத்து அரசியல் நெருக்கடிகள் மற்றும் போரின் அவலங்களை வெளிப்படுத்தும் வலிமையான கருவியாகவும் பரிணமித்தது.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையின் வருகை, நாடகத்தைத் வெறும் சடங்காகவோ அல்லது பொழுதுபோக்காகவோ மட்டும் பார்க்காமல், அதனை ஒரு கல்விசார் கற்கைநெறியாக மாற்றியது. இது சர்வதேச அரங்கக் கோட்பாடுகளை உள்வாங்கி, மரபுவழிப் பண்புகளை நவீனத்துவத்துடன் இணைக்கும் புதியதொரு தேடலுக்கு வழிவகுத்ததோடு, நாடகத்துறையில் கல்வியறிவு பெற்ற ஒரு புதிய தலைமுறையையும் உருவாக்கியுள்ளது. இத்தகைய செழுமையான பின்புலத்தைக் கொண்டிருந்தாலும், கலைஞர்களின் பொருளாதாரப் பாதுகாப்பின்மை என்பது இக்கலையின் எதிர்காலத்திற்கு ஒரு பெரும் சவாலாகவே நீடிக்கின்றது.

மட்டக்களப்புப் பிரதேச நாடகக் கலைஞர்களின் சமூகப் பொருளாதார நிலை இன்றும் விளிம்பு நிலையிலேயே காணப்படுகின்றது. இச்சிக்கலானது வருமானப் பற்றாக்குறை என்பதற்கு அப்பால், சமூக அங்கீகாரம் மற்றும் கொள்கை ரீதியான புறக்கணிப்புகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இவ்வாய்வு பின்வரும் மூன்று முதன்மைச் சிக்கல்களை முன்வைக்கின்றது:

- தொழில்முறை அங்கீகாரமின்மை: நாடகம் ஒரு சமூகச் சேவை அல்லது சமயச் சடங்கு என்ற வட்டத்திற்குள் முடக்கப்பட்டுள்ளதால், கலைஞர்களுக்கான ஊதியம் தொழில்முறை ஊதியமாக வழங்கப்படாமல் ஒரு சிறு காணிக்கையாகவே அமைகின்றது. இவர்கள் தொழிலாளர் வர்க்கமாக அடையாளப்படுத்தப்படாததால், வங்கி மற்றும் அரச சலுகைகளைப் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன.
- வருமானச் சுழற்சியும் வறுமையும்: நாடகத் தொழில் பருவகாலத் தன்மையைக் கொண்டிருப்பதால் (சித்திரை - வைகாசி), ஆண்டின் ஏனைய காலங்களில் கலைஞர்கள் வறுமைக்கும் கடன் சுமைக்கும் ஆளாகின்றனர். குறிப்பாக, 40-60 நாட்கள் வரையிலான நீண்ட பயிற்சிக் காலங்களில் ஊதியம் வழங்கப்படாமை இவர்களின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதிக்கின்றது.
- பாதுகாப்புத் திட்டங்களின் போதாமை: நடைமுறையிலுள்ள கலைஞர் ஓய்வூதியத் திட்டத்தில் காணப்படும் 45 வயது வரம்பு மற்றும் சிக்கலான நிருவாக நடைமுறைகளால் 80 சதவீத கலைஞர்கள் பலன் பெற முடிவதில்லை. மேலும், மேடை விபத்துகள் மற்றும் உடல்நலப் பாதிப்புகளை எதிர்கொள்ள எவ்வித மருத்துவக் காப்புறுதி வசதிகளும் இல்லாமை ஒரு பாரிய சிக்கலாக உள்ளது.

## 2. இலக்கிய மீளாய்வு

நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் தொடர்பான முன்னைய ஆய்வுகள், உலகளாவிய ரீதியிலும் உள்ளூர் அளவிலும் பல்வேறு கோணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச மட்டத்தில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள், கலைஞர்களின் பொருளாதாரச் சுதந்திரத்தையே அவர்களின் படைப்பாற்றலுக்கான அடிப்படைத் தேவையாக முன்னிறுத்துகின்றன. குறிப்பாக, அமர்த்தியா சென் (1999) போன்ற அறிஞர்கள், தனிமனிதத் திறன்கள் முழுமையாக வெளிப்படப் பொருளாதாரப் பாதுகாப்பும் அடிப்படை உரிமைகளும் அவசியமென்பதை வலியுறுத்துகின்றனர். ஆசியச் சூழலில் நாடகம் ஒரு சமூக மாற்றத்திற்கான கருவியாகக் கொள்ளப்பட்டாலும், கலைஞர்களின் தொழில்சார் அந்தஸ்து இன்றும் உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே உள்ளதாக ஆய்வுகள் (Van Erven, 1992) சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கைப் பின்புலத்தில் அமைந்த ஆய்வுகள் பெரும்பாலும் போருக்குப் பின்னரான பண்பாட்டு மீள்நிர்மாணம் குறித்தே அதிக அக்கறை கொண்டுள்ளன. இருப்பினும், அவை நிகழ்த்துகைகளை மீட்டெடுப்பதில் காட்டிய ஆர்வத்தைக் கலைஞர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நீண்டகாலத் திட்டங்களை வகுப்பதில் காட்டவில்லை (Fernando, 2018) என்பது

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

முக்கியமானதொரு குறையாகும். மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பொறுத்தவரை, கூத்து மரபுகள் கல்விப்புல ரீதியாக மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை ஆய்வுகள் (ஜெயசங்கர், 2004) உறுதிப்படுத்துகின்றன.

ஆயினும், இக்கலைஞர்களின் "பொருளாதார இயங்கியல்" மற்றும் அவர்களின் அன்றாடப் பிழைப்புத் தந்திரோபாயங்கள் குறித்து முறையான ஆய்வுகள் முன்னெடுக்கப்படாமை ஒரு பாரிய ஆய்வு இடைவெளியாகக் காணப்படுகின்றது. இதுவரை வெளிவந்த ஆய்வுகள் யாவும் நாடகத்தின் அழகியல், வரலாறு மற்றும் அதன் சமூகப் பயன்பாடு என்பவற்றிற்கே முன்னுரிமை அளித்துள்ளன. கலைஞர்களின் வாழ்வாதாரச் சவால்கள், அவர்களுக்குரிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் நிருவாகச் சிக்கல்கள் குறித்துக் கள ஆய்வு ரீதியான ஆழமான பார்வைகள் குறைவாகவே உள்ளன. அந்த ஆய்வு இடைவெளியை நிரப்புவதே இக்கட்டுரையின் முதன்மைப் போக்காகும்.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு மட்டக்களப்புப் பிரதேச நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரச் சவால்களை ஆழமாகப் பகுப்பாய்வு செய்ய பண்புசார் ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- ஆய்வு வடிவமைப்பு: கலைஞர்களின் வாழ்வியலை அவர்களின் சொந்தக் கண்ணோட்டத்திலேயே விவரிக்கும் பொருள்விளக்க ஆய்வுச்சட்டகத்தை இவ்வாய்வு பயன்படுத்துகின்றது.
- தரவுச் சேகரிப்பு முறைகள்: தரவுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய முக்கோணமுறை பயன்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் 20 கலைஞர்களுடன் (மூத்த அண்ணாவிமார் மற்றும் இளையோர்) நடத்தப்பட்ட ஆழமான நேர்காணல்கள், மூன்று குவியக்குழு கலந்துரையாடல்கள் மற்றும் அரச திணைக்களங்களின் ஆண்டறிக்கைகள் (2023-2024) மூலம் தரவுகள் திரட்டப்பட்டன.
- ஆய்வு எல்லை மற்றும் மாதிரித் தெரிவு: மட்டக்களப்பின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் ஆரையம்பதி (மரபுவழிக் கூத்து), வாகரை (போரினால் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரம்), மற்றும் மட்டக்களப்பு நகர் (நவீன நாடகங்கள்) ஆகிய மூன்று பகுதிகள் ஆய்வு எல்லையாகத் தெரிவு செய்யப்பட்டன.
- தரவுப் பகுப்பாய்வு: நேர்காணல்கள் மற்றும் விவாதங்களின் மூலம் பெறப்பட்ட தரவுகள் தலைப்புசார் பகுப்பாய்வு முறைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது வருமானச் சுழற்சி, சமூகப் பாதுகாப்பு அணுகல் மற்றும் உளவியல் நெருக்கடிகள் ஆகிய காரணிகள் வகைப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டன.

## 4. ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடலும்

### *4.1 வாழ்வாதாரச் சவால்கள்*

மட்டக்களப்புப் பிரதேச நாடகக் கலைஞர்களின் வாழ்வியலானது ஒருபுறம் மிகுந்த கலைப் பெருமிதத்தையும், மறுபுறம் சொல்லொணா பொருளாதாரத் துயரங்களையும் கொண்ட முரணான இருப்புநிலையாகும். கள ஆய்வின் ஊடாகக் கண்டறியப்பட்ட சவால்களைப் பின்வரும் நான்கு முக்கிய தலைப்புகளின் கீழ் விரிவாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

*4.1.1* **பொருளாதாரச் சுமை: பயிற்சியும் ஊதியமும்**

நாடகக் கலையைப் பொறுத்தவரை, ஒரு முழுமையான நிகழ்த்துகை மேடைக்கு வருவதற்கு முன்பாக மேற்கொள்ளப்படும் நீண்டகாலப் பயிற்சிகள் கலைஞர்களின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

பயிற்சிக் காலங்களில் வருமானமின்மை: மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் (கூத்து) பொதுவாக நாற்பது முதல் அறுபது நாட்கள் வரை தொடர்ச்சியான பயிற்சியைக் கோருபவை. இப்பயிற்சிகள் பெரும்பாலும் இரவு நேரங்களில் இடம்பெற்றாலும், பகல் நேரங்களில் கலைஞர்கள் தங்களின் வாழ்வாதாரத் தொழில்களில் (மீன்பிடி, விவசாயம்) முழுமையாக ஈடுபட முடியாத உடல்ச்சோர்வை ஏற்படுத்துகின்றன. இப்பயிற்சிக் காலங்களில் கலைஞர்களுக்கு எவ்விதக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை. இதனால், அவர்கள் தங்களின் சேமிப்பைச் செலவிட வேண்டிய அல்லது கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் (ஜெயசங்கர், *2004, ப.78*).

மறைமுகச் செலவுகள்: பயிற்சிக்காகப் பயணப்படும் போக்குவரத்துச் செலவுகள், உணவுச் செலவுகள் ஆகியவற்றைத் தொழிலற்ற கலைஞர்களே ஏற்க வேண்டியுள்ளது. இது குடும்பத் தலைவர்களாக இருக்கும் கலைஞர்களுக்கு மேலதிக நிதிச் சுமையாக மாறுகின்றது.

மிகக்குறைந்த ஊதியம்: ஒரு முழு இரவுக் கூத்து அல்லது ஒரு நவீன நாடக நிகழ்த்துகைக்காகக் கலைஞருக்கு வழங்கப்படும் ஊதியம், இன்றைய வாழ்க்கைச் செலவோடு ஒப்பிடும்போது மிகக் குறைவானது. கலைஞன் என்பவன் சேவை செய்பவன் என்ற பொதுப் பிம்பம், அவர்களுக்கு முறையான தொழில்முறை ஊதியம் வழங்கப்படாமல் இருப்பதற்குச் சமூகக் காரணியாக அமைகின்றது. பல கிராமங்களில் வழங்கப்படும் காணிக்கை ஒரு கூலித் தொழிலாளியின் ஒருநாள் ஊதியத்தை விடவும் குறைவாக இருப்பதை ஆய்வில் அறிய முடிந்தது.

*4.1.2* **தொழில்சார் பாதுகாப்பின்மை**

நாடகக் கலை மட்டக்களப்பில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில் துறையாக மாறாததால், கலைஞர்கள் பெரும் தொழில்சார் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் (Creative Economy Report, 2023).

பருவகால வேலைவாய்ப்பு: மட்டக்களப்பின் நாடக ஆற்றுகையானது சித்திரை - வைகாசி மாதங்களில் நிகழும் ஆலயச் சடங்குகளை மட்டுமே மையமாகக் கொண்டது. வருடத்தின் ஏனைய பத்து மாதங்கள் கலைஞர்களுக்குக் கலையினூடாக எவ்வித வருமானமும் கிடைப்பதில்லை. இந்த நிலையற்ற தன்மை காரணமாக, கலைஞர்களால் ஒரு நிலையான பொருளாதாரத் திட்டமிடலை மேற்கொள்ள முடிவதில்லை.

நவீன ஊடகங்களின் வளர்ச்சி மற்றும் சமூக மாற்றங்களால், பாரம்பரியக் கூத்துகளுக்கான தேவை குறைந்து வருகின்றது. இதனால் அண்ணாவிமார்கள் மற்றும் கலைஞர்களுக்கான கேள்வி அல்லது தேவைப்பாடு வீழ்ச்சியடைந்துள்ளது.

காப்புறுதி மற்றும் மருத்துவப் பாதுகாப்பின்மை: மட்டக்களப்புக் கூத்துகளில் மேடை அமைப்புகள் (களரி) மரபுரீதியானவை. பயிற்சியின் போதோ அல்லது நிகழ்த்துகையின் போதோ விபத்துக்கள் ஏற்பட்டால் அதனை ஈடுகட்ட எந்தவொரு காப்புறுதித் திட்டமும் நடைமுறையில் இல்லை. வாகரைப் பகுதியில் நேர்காணப்பட்ட ஒரு மூத்த கலைஞர், மேடையில் ஏற்பட்ட விபத்தின் பின்னர் நிரந்தரமாகத் தொழில் செய்ய முடியாத நிலைக்குத்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

தள்ளப்பட்டும், எவ்வித இழப்பீடும் கிடைக்காததால் தற்போது வறுமையில் வாழ்ந்து வருவதைச் சுட்டிக்காட்டினார்.

***4.1.3 உளவியல் மற்றும் சமூகச் சவால்கள்***

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அப்பால், கலைஞர்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான நெருக்கடிகள் அவர்களின் கலைத்திறனைப் பாதிக்கின்றன.

சமூக அங்கீகார முரண்பாடு: மட்டக்களப்புச் சமூகம் ஒரு கலைஞனை மேடையில் கடவுளாகவோ அல்லது மாவீரனாகவோ போற்றிப் புகழ்கின்றது. ஆனால், அதே கலைஞன் மேடையை விட்டு இறங்கியதும் ஒரு சாதாரணக் கூலித் தொழிலாளியாகவே பார்க்கப்படுகின்றான். இந்த இரட்டை நிலைப்பாடு கலைஞர்களிடையே, குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே ஒருவித தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகின்றது.

குடும்பத் தேவைகளும் கடப்பாடுகளும்: கலை பசியைத் தீர்க்காது என்ற குடும்பத்தினரின் அழுத்தம் கலைஞர்களைத் தீவிரமான மன உளைச்சலுக்கு உள்ளாக்குகின்றது. பிள்ளைகளின் கல்விச் செலவு மற்றும் வீட்டுத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையில், பல கலைஞர்கள் கலையைக் கைவிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர்.

கடன் சுமை: வருமானம் இல்லாத காலங்களில் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவதும், பின்னர் கிடைக்கும் சொற்ப ஊதியத்தைக்கொண்டு அக் கடனை அடைக்க முடியாமல் போவதும் ஒரு நச்சுச் சுழற்சியாக மாறி, கலைஞர்களை நிரந்தரக் கடனாளிகளாக ஆக்குகின்றது.

***4.1.4 பொருளாதார நெருக்கடியின் தாக்கம்***

இலங்கையின் அண்மைய பொருளாதார வீழ்ச்சி, மட்டக்களப்பு நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தைப் பேரிழப்பிற்கு உள்ளாக்கி, அவர்களின் இருத்தலையே கேள்விக்குறியாக்கியுள்ளது (இலங்கை மத்திய வங்கி, 2024).

உற்பத்திச் செலவு அதிகரிப்பு: நாடகத் தயாரிப்பிற்குத் தேவையான ஆடை அணிகலன்கள், ஒப்பனைப் பொருட்கள் மற்றும் இசைக்கருவிகளின் பராமரிப்புச் செலவுகள் பன்மடங்கு உயர்ந்துள்ளன. இத்தகைய செலவு அதிகரிப்பிற்கு ஏற்பக் கலைஞர்களின் ஊதியத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நிகழ்த்துகை வாய்ப்புகள் குறைவடைதல்: நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, வழிபாட்டிடங்கள் மற்றும் கலை அமைப்புகள் தங்களின் வருடாந்த நிகழ்வுகளைத் தவிர்க்கும் அல்லது மட்டுப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இது கலைஞர்களின் எஞ்சியிருந்த குறைந்தபட்ச வருமான வழிகளையும் முடக்கியுள்ளது.

***4.2 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்: ஓர் மதிப்பீடு***

நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் முதுகெலும்பாக அமைகின்றன. இலங்கையில் கலை மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் அரசினால் முன்னெடுக்கப்பட்டாலும், மட்டக்களப்புப் பிரதேச நாடகக் கலைஞர்களைப் பொறுத்தவரை இத்திட்டங்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது விரிவான ஆய்வுக்குரியது. குறிப்பாக, இத்திட்டங்கள் கலைஞர்களின் எதார்த்தமான வாழ்வியலோடு எவ்வளவு தூரம் பொருந்துகின்றன என்பதைப் பின்வரும் பகுப்பாய்வு விளக்குகின்றது.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

#### 4.2.1 இலங்கையின் கலைஞர் ஓய்வூதியத் திட்டம்

இலங்கை கலாசார திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "கலைஞர் ஓய்வூதியத் திட்டம்" கலைஞர்களின் முதுமைக்கால வறுமையைப் போக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான சமூகப் பாதுகாப்புப் பொறிமுறையாகும். இருப்பினும், மட்டக்களப்புப் பிரதேசக் கலைஞர்களுடனான நேர்காணல்கள் மற்றும் ஆவண ஆய்வுகளின் ஊடாக இத்திட்டத்தில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

தகுதி வரம்புகளும் நடைமுறை முரண்பாடுகளும்: இத்திட்டத்தில் இணைவதற்கு ஒரு கலைஞர் 45 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. மட்டக்களப்பில் உள்ள பெரும்பாலான மரபுவழிக் கலைஞர்கள் (கூத்து அண்ணாவிமார் மற்றும் கலைஞர்கள்) தங்களின் இளமைக் காலத்தில் வாழ்வாதாரத்திற்காகப் போராடுவதிலேயே காலத்தைக் கடத்துகின்றனர். 45 வயதைக் கடந்த பின்னரே தங்களின் முதுமைக் காலத்தைப் பற்றிய சிந்தனை அவர்களுக்கு எழுகின்றது. அச்சமயத்தில் இத்திட்டத்தில் இணைய முடியாத வயதுத் தடை ஒரு பெரும் சுவராகி நிற்கின்றது (இலங்கை கலாசார திணைக்களம், 2022).

பங்களிப்புத் தொகை செலுத்துவதில் உள்ள சிக்கல்: இத்திட்டம் ஒரு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமாகும். கலைஞர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தவணை முறையில் செலுத்த வேண்டும். ஆனால், ஏற்கனவே வாழ்வாதாரச் சவால்களை எதிர்கொள்ளும் மட்டக்களப்புக் கலைஞர்கள், சீரான வருமானம் இல்லாத நிலையில் இத்தொகையைத் தொடர்ச்சியாகச் செலுத்த முடியாமல் இடையில் கைவிடும் நிலை காணப்படுகின்றது.

மத்திய மயப்படுத்தப்பட்ட நிருவாகம்: இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் மற்றும் செயலாக்கங்கள் பெரும்பாலும் கொழும்பை மையமாகக் கொண்டு நடைபெறுகின்றன. மட்டக்களப்பு போன்ற தூரப் பிரதேசக் கலைஞர்களுக்குத் தேவையான வழிகாட்டல்கள் உள்ளூர் மொழியில் (தமிழ்) முறையாகச் சென்றடைவதில்லை. விண்ணப்ப நடைமுறைகளில் உள்ள சிக்கலான "சிவப்பு நாடா" முறைமை, கல்வியறிவு குறைந்த மரபுவழிக் கலைஞர்களை இத்திட்டத்திலிருந்து அந்நியப்படுத்துகின்றது.

#### 4.2.2 மருத்துவக் காப்புறுதி மற்றும் அவசரகால நிதி உதவிகளின் நிலை

நாடகக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான சவால் "திடீர் உடல்நலக் குறைவு" அல்லது "ஆற்றுகை விபத்துகள்" ஆகும். மட்டக்களப்பு மாவட்ட நாடகக் கலைஞர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், அவர்களுக்கெனப் பிரத்தியேகமான எவ்வித மருத்துவக் காப்புறுதித் திட்டங்களும் செயல்பாட்டில் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

தொழில்சார் அபாயங்களுக்கான பாதுகாப்பின்மை: கூத்து மேடை அமைப்புகள் (களரி) மற்றும் இரவு நேர ஆற்றுகைகள் கலைஞர்களுக்குப் பலவிதமான உடல் உபாதைகளை ஏற்படுத்துகின்றன. மேடையிலிருந்து விழுந்து காயமடைதல் அல்லது நீண்ட கால இரவுப் பணிகளால் ஏற்படும் சுவாச மற்றும் எலும்புத் தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சை பெறக் கலைஞர்கள் தங்களின் சொத்துக்களை விற்க வேண்டிய அல்லது கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அவசரகால நிதி உதவி: கலாசார திணைக்களம் அல்லது பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்படும் "கலைஞர் உதவித் தொகை" என்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டது. மரணச் சடங்குகள் அல்லது மிகக் கடுமையான நோய்களின் போது வழங்கப்படும் இந்த நிதி உதவி,

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

ஒரு கலைஞரின் வாழ்நாள் உழைப்பிற்கு வழங்கப்படும் கௌரவமான தொகையாகவோ அல்லது முழுமையான மருத்துவச் செலவை ஈடுகட்டும் தொகையாகவோ அமைவதில்லை.

தனியார் காப்புறுதி நிறுவனங்களின் அணுகுமுறை: நிலையான மாத வருமானம் இல்லாத காரணத்தினால், தனியார் காப்புறுதி நிறுவனங்கள் நாடகக் கலைஞர்களுக்குக் காப்புறுதி வழங்கத் தயக்கம் காட்டுகின்றன. இது கலைஞர்களைப் பாதுகாப்பற்ற ஒரு சூழலிலேயே வைத்திருக்கின்றது.

### 4.2.3 கலைஞர் அடையாள அட்டை: பயன்பாடும் மட்டுப்பாடுகளும்

இலங்கை கலாசார திணைக்களத்தினால் வழங்கப்படும் "கலைஞர் அடையாள அட்டை" ஒரு கலைஞருக்கான சமூக அங்கீகாரத்தின் முதற்படியாகக் கருதப்படுகின்றது. மட்டக்களப்பில் பல கலைஞர்கள் இவ்வடையாள அட்டையைப் பெற்றுள்ள போதிலும், அதன் பயன்பாடு என்பது வெறும் அடையாளமாக மட்டுமே சுருங்கிப் போயுள்ளது.

அங்கீகாரம் மற்றும் பயன்பாடு: இவ்வடையாள அட்டை கலைஞர்களுக்குச் சமூகத்தில் ஒரு கௌரவத்தை வழங்குகின்றது. குறிப்பாக, காவல்துறை சோதனைகள் அல்லது அரச அலுவலகங்களில் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள இது உதவுகின்றது. இருப்பினும், பொருளாதார ரீதியாக இவ்வடையாள அட்டையினால் கலைஞர்களுக்கு எவ்வித நேரடிச் சலுகைகளும் (உதாரணமாக: பொதுப் போக்குவரத்தில் சலுகை, மருத்துவச் செலவுகளில் கழிவு அல்லது கடன் வசதிகள்) வழங்கப்படுவதில்லை.

தகவல் திரட்டு குறைபாடு: அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட போதிலும், மட்டக்களப்பு மாவட்ட கலைஞர்களின் முழுமையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட ஒரு தரவுத்தளம் அரசிடம் இல்லை. இதனால், பொருளாதார நெருக்கடி காலங்களில் நிவாரணங்களை நேரடியாகக் கலைஞர்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் பாரிய தாமதங்கள் ஏற்படுகின்றன.

மட்டுப்பாடுகள்: அடையாள அட்டை பெறுவதற்கான தகுதி நிலைகள் அண்ணாவிமார்களின் உறுதிப்படுத்தல் மூலம் பெறப்பட்டாலும், நவீன நாடகத் துறையில் ஈடுபட்டுள்ள இளையோருக்கு இதனைப் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன. மேலும், இவ்வடையாள அட்டை ஒரு கலைஞருக்கு தொழில்முறைத் தகைமையை வழங்காததால், இதனைக் கொண்டு கலைஞர்கள் வங்கிக் கடன் வசதிகளைப் பெற முடிவதில்லை.

### 4.2.4 மதிப்பீட்டின் தொகுப்பு: சமூகப் பாதுகாப்பின் தோல்வி

மட்டக்களப்புப் பிரதேச நாடகக் கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பு குறித்த இப்பகுதியைப் பகுப்பாய்வு செய்யும் போது பின்வரும் முக்கிய முடிவுகளுக்கு வர முடிகின்றது:

கட்டமைப்புச் சிதைவு: தற்போதுள்ள திட்டங்கள் யாவும் கொழும்பைத் தளமாகக் கொண்ட ஒரு பொதுவான சட்டகத்திற்குள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை மட்டக்களப்பின் "கூத்து" போன்ற நீண்ட காலப் பயிற்சி தேவைப்படும் மற்றும் பருவ காலங்களைச் சார்ந்த கலைகளின் பொருளாதாரச் சுழற்சியைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டன.

நிதி அறியாமை: கலைஞர்களுக்குத் தங்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லை. இது அவர்களின் பொருளாதார நலிவிற்கு ஒரு முக்கியக் காரணமாகும்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

அரசியல் மற்றும் சமூகப் புறக்கணிப்பு: நாடகக் கலைஞர்கள் ஒரு வலிமையான "தொழிற்சங்க" அமைப்பைக் கொண்டிராததால், தங்களின் உரிமைகளை அரசிடம் வலியுறுத்திக் கேட்டுப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

முடிவாக, மட்டக்களப்பு நாடகக் கலைஞர்களுக்கான சமூகப் பாதுகாப்பு என்பது வெறும் நிதி உதவி என்பதாக மட்டும் சுருங்கிவிடக் கூடாது. அது அவர்களின் தொழில்சார் உரிமைகளை மதிக்கும், அவர்களின் முதுமைக்காலத்தை கௌரவப்படுத்தும் மற்றும் அவர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்கும் ஒரு விரிவான "நலன்புரிச் சட்டகமாக" மாற்றப்பட வேண்டியது சர்வதேச ஆய்வு நோக்கில் பரிந்துரைக்கப்படுகின்றது (விமலராஜ், 2025, ப.256).

### *4.3 ஆய்வு பற்றிய கலந்துரையாடல்களின் தொகுப்பு*

இவ்வாய்வின் கள யதார்த்தங்களின் அடிப்படையில், மட்டக்களப்பு நாடகக் கலைஞர்களின் வாழ்வாதார நிலை குறித்த முக்கிய முடிவுகள் வருமாறு:

#### *4.3.1 முக்கிய கண்டடைவுகள்*

பண்பாட்டுப் பெருமிதமும் பொருளாதார நலிவும்: சமூகம் கலைஞர்களைப் பண்பாட்டு அடையாளங்களாகப் போற்றினாலும், "கலைஞன் ஒரு தியாகி" எனும் பொதுப்புத்தியால் அவர்களுக்கு முறையான ஊதியம் வழங்கப்படுவதில்லை. இது அவர்களின் பொருளாதார நலிவிற்கு முக்கிய உளவியல் காரணியாக உள்ளது.

கட்டமைப்புச் சார்ந்த பாதுகாப்பின்மை: தற்போதைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மேலிருந்து கீழ் நோக்கிய அதிகார மையப்படுத்தப்பட்டவை. இவை மட்டக்களப்பின் கூத்து மரபுக்கே உரிய நீண்டகாலப் பயிற்சி மற்றும் பருவகாலச் சுழற்சியைக் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டன.

தொழில்முறை அங்கீகாரமின்மை: நாடகக் கலை ஒரு முழுநேரத் தொழிலாக அங்கீகரிக்கப்படாததால், கலைஞர்கள் வாழ்வாதாரத்திற்காகக் கூலித் தொழில்களைச் சார்ந்துள்ளனர். இது அவர்களின் படைப்பாற்றலை மழுங்கடிப்பதோடு முதுமைக்கால வறுமைக்கும் வழிவகுக்கின்றது.

#### *4.3.2 விவாதம்: படைப்பாற்றல் பொருளாதாரத்தை நோக்கி*

கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் தற்காலிக நிவாரணங்களுக்கு அப்பால், கலையை ஒரு படைப்பாற்றல் பொருளாதாரமாக மாற்றுவது அவசியமாகும்:

அறிவுசார் சொத்து: மட்டக்களப்பு நாடக மரபை ஒரு சமயச் சடங்காக மட்டும் பார்க்காமல், வருமானம் ஈட்டும் "அறிவுசார் சொத்தாக" மாற்றியமைக்க வேண்டும்.

சந்தை வாய்ப்புகள்: கலைஞர்களைப் பாடசாலைகளில் கல்விசார் வளவாளர்களாகவும், பண்பாட்டுச் சுற்றுலா வழிகாட்டிகளாகவும் ஈடுபடுத்துவதன் மூலம் நிலையான வருவாயை உறுதிப்படுத்தலாம்.

தொழிற்சங்க வலிமை: குறைந்தபட்ச நியம ஊதிய முறையை வரையறுப்பதற்கும், அரசாங்கத்திடம் பேரம் பேசும் சக்தியைப் பெறுவதற்கும் கலைஞர்கள் தொழிற்சங்க ரீதியாக ஒன்றிணைய வேண்டும்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

*4.3.3 கொள்கை மாற்றத்தின் அவசியம்*

நாடகக் கலைஞர்களை வெறும் "சேவையாளர்களாக" நோக்காமல், அவர்களைப் படைப்பாளிகளாகவும் உழைப்பாளர்களாகவும் கருதும் ஒரு புதிய பொருளாதாரச் சட்டகம் உருவாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாடகத்துறை ஒரு கௌரவமான தொழிலாக நிலைபெறும்.

## 5. ஆய்வின் முடிவுகள்

மட்டக்களப்பின் செழுமையான நாடக வரலாறு, கூத்து மரபுகள் முதல் நவீன மேடை நாடகங்கள் வரை ஒரு வலுவான அறிவுசார் பின்புலத்தைக் கொண்டிருந்தாலும், அதனைத் தாங்கி நிற்கும் கலைஞர்களின் அன்றாட வாழ்வு தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளேயே சிக்கியுள்ளது. இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டபடி, நாடகக் கலை ஒரு முழுநேரத் தொழிலாக அங்கீகரிக்கப்படாமை, வருமானத்தின் பருவகாலத் தன்மை மற்றும் முறையான சமூகப் பாதுகாப்பு பொறிமுறைகள் இல்லாமை ஆகியவை கலைஞர்களைக் கடன் சுமையிலும் முதுமைக்கால வறுமையிலும் தள்ளியுள்ளன. குறிப்பாக, தற்போது நடைமுறையிலுள்ள அரச ஓய்வூதியத் திட்டங்களும் அடையாள அட்டை நடைமுறைகளும் அடிமட்டக் கலைஞர்களின் எதார்த்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தோல்வியடைந்துள்ளன என்பது முதன்மையான முடிவாகும். ஒரு சமூகத்தின் பண்பாடு என்பது கலைஞர்களின் படைப்பாற்றல் மூலமே அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றது. எனவே, கலைஞர்களின் பொருளாதாரப் பாதுகாப்பு என்பது தனிப்பட்ட ஒரு குழுவின் நலன் சார்ந்தது மட்டுமல்ல, அது ஒரு இனத்தின் பண்பாட்டுப் பாதுகாப்பாகும். கலைஞர்கள் தங்களின் அடிப்படை வாழ்வாதாரத்திற்காக ஏனைய கூலித் தொழில்களை நாட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகும்போது, அவர்களின் கலைத்திறன் மழுங்கடிக்கப்படுவதோடு, தனித்துவமான கலை வடிவங்கள் அதன் செழுமையை இழந்து வெறும் காட்சிப் பொருளாக மாறும் அபாயமும் ஏற்படுகின்றது.

ஆகவே, மட்டக்களப்பு நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, கலையை ஒரு பொருளாதாரத் துறையாக அணுக வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். கலைஞர்களுக்கான முறையான ஊதியத்தை உறுதிப்படுத்துதல், நவீன வேலைவாய்ப்புச் சந்தையுடன் அவர்களின் திறன்களை இணைத்தல் மற்றும் விளிம்புநிலை கலைஞர்களையும் உள்ளடக்கிய விரிவான சமூகப் பாதுகாப்பு சட்டகத்தை உருவாக்குதல் மிக அவசியமாகும். அரசும் சமூக அமைப்புகளும் ஒன்றிணைந்து கலைஞர்களின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே மட்டக்களப்பின் மகத்தான நாடகப் பாரம்பரியத்திற்குச் செய்யும் உண்மையான கௌரவமாகும். கலைஞன் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே, கலையின் ஊடாக ஒரு சமூகம் தனது ஆன்மாவைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பது இவ்வாய்வின் இறுதிச் சாரமாகும்.

## 6. ஆய்வின் பரிந்துரைகள்

மட்டக்களப்பு நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும், சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தவும் பின்வரும் கொள்கை ரீதியான மாற்றங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன:

- நிதியியல் பாதுகாப்பு: கலைஞர்களுக்கெனப் பிரத்யேக கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, திருவிழாக் கால வருமானத்தைச் சேமிக்க ஊக்குவித்தல். ஆடை மற்றும் வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்ய அரச வங்கிகள் ஊடாக வட்டி இல்லா நுண்கடன் வசதிகளையும், மேடை விபத்துகளுக்கான அவசரகால இடர்நிதியத்தையும் மாவட்ட மட்டத்தில் உருவாக்குதல்.
- நியம ஊதியமும் ஒப்பந்தங்களும்: பயிற்சிக் காலம் மற்றும் ஆற்றுகைகளுக்கென ஒரு குறைந்தபட்ச நியம ஊதியத்தை வரையறுத்தல். வாய்மொழி உடன்படிக்கைகளுக்குப் பதிலாக, காப்புறுதி மற்றும் ஊதிய விபரங்களை உள்ளடக்கிய எழுத்துப்பூர்வமான

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

ஒப்பந்த முறையைக் கட்டாயமாக்குதல். கலைஞர்களின் தொழில்முறை அந்தஸ்தை உயர்த்த டிஜிட்டல் தரவுத்தளத்தை உருவாக்குதல்.

- சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தல்: நாடகக் கலைஞர்களைப் பாடசாலைகளில் கல்விசார் நாடக வளவாளர்களாகவும், உளவியல் பாதிப்புகளைத் தீர்க்கும் அரங்கு மருத்துவப் பயிற்சியாளர்களாகவும் ஈடுபடுத்தி நிலையான வருமானத்தை உறுதி செய்தல். மட்டக்களப்பின் கூத்து மரபைச் சுற்றுலாத்துறையுடன் இணைத்து உலகளாவிய சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்.
- கொள்கை மாற்றங்கள்: கலைஞர்களைத் தொழிலாளர்களாக அங்கீகரிக்கும் வகையில் தேசிய மட்டத்தில் கலைஞர் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருதல். இதன் மூலம் ஊழியர் சேமலாப நிதி போன்ற சலுகைகளை உறுதிப்படுத்துதல். தனியார் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதியினை உள்ளூர் கலைகளின் நீடிப்புத்திறனுக்காகப் பயன்படுத்துதல்.

**உசாத்துணைகள்**

இலங்கை கலாசார திணைக்களம். (2022). கலைஞர் ஓய்வூதியத் திட்ட வழிகாட்டிக் கையேடு மற்றும் நிருவாக அறிக்கை. கொழும்பு: அரசாங்க வெளியீட்டுப் பணியகம்.

இலங்கை மத்திய வங்கி. (2024). ஆண்டறிக்கை: பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்வாதாரத் தாக்கம். கொழும்பு: இலங்கை மத்திய வங்கி வெளியீடு.

கனகசெந்திநாதன், க. (1968). மட்டக்களப்புத் தமிழகம். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு.

குணசிங்கம், செ. (1982). மட்டக்களப்புத் தமிழ் நாடகங்கள். மட்டக்களப்பு: கிழக்குப் பல்கலைக்கழகம்.

சிவத்தம்பி, கா. (1983). தமிழ் நாடக வரலாறு. சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.

தில்லைநாதன், சி. (1994). மட்டக்களப்பு நாட்டுக்கூத்து: ஓர் அறிமுகம். சென்னை: மீனாட்சி புத்தக நிலையம்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகம். (2023). மாவட்டப் புள்ளிவிபர அறிக்கை: கலை மற்றும் கலாசாரத் துறை. மட்டக்களப்பு: மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவு.

மௌனகுரு, சி. (1998). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள். மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு.

வித்தியானந்தன், சு. (1962). ஈழத்துத் தமிழ் நாடக வரலாறு. யாழ்ப்பாணம்: கலைக்களம்.

விமலராஜ், அ. (2025). கலையும் ஆய்வும்: அழகியல் கற்கைகளுக்கான ஆய்வு அணுகுமுறைகள். சென்னை: நியூ செஞ்சூரி புத்தக இல்லம்.

ஜெயசங்கர், சி. (2004). ஈழத்து மரபுவழி அரங்குகள்: மீளுருவாக்கமும் வாழ்வாதாரமும் ஜஆய்வேடு, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

Creative Economy Report. (2023). *The status of visual and performing artists in South Asia: Policies for the status of the artist*. UNESCO / UNDP / UNESCO Publishing.

Fernando, A. (2018). *Post-war cultural reconstruction in Northern and Eastern Sri Lanka*. Routledge.

Sen, A. (1999). *Development as freedom*. Oxford: University Press.

Van Erven, E. (1992). *The playful revolution: Theatre and liberation in Asia*. Indiana University Press.

© *Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 